**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்**

**COS.No. 58 of 2024**

**2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27ம் நாள் செவ்வாய்க்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | DW1–திரு.முருகேசன் | கிராமம்: | |
| த.பெ. | திரு.காளியண்ணன் | வேலை: | |
| வயது | 63 | செல்போன் எண் | |

**முதல் விசாரணை:**

**என் பெயர் முருகேசன், வயது 63, த/பெ.காளியண்ணன். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். மேலும், என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டுகிறேன்.**

**1) 2ம் பிரதிவாதிக்கும் வாதி நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட வரவு செலவு கணக்கு (1 ஏப்ரல் 2017–31.03.2018) – அசல்**

**2) 2ம் பிரதிவாதிக்கும் வாதி நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட வரவு செலவு கணக்கு (1 ஏப்ரல் 2018–31.03.2019) – அசல்**

**3) 1ம் பிரதிவாதிக்கும் வாதி நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட வரவு செலவு கணக்கு (1 ஏப்ரல் 2019–31.03.2020) – அசல்**

4) 1ம் பிரதிவாதிக்கும் வாதி நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட வரவு செலவு கணக்கு (1 ஏப்ரல் 2020–31.03.2021) – அசல்

5) 1ம் பிரதிவாதிக்கும் வாதி நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட வரவு செலவு கணக்கு (1 ஏப்ரல் 2021–31.03.2022) – அசல்

மேற்குறிப்பிட்ட ஆவணத்தில் பிரதிவாதி நிறுவன முத்திரையோ அல்லது அதை தயாரித்தவரின் கையொப்பமோ இடம்பெறவில்லை, மேலும் பிரதிவாதி நிறுவனத்தின் முழு கணக்கு பட்டியலில் இருந்து தான் மேற்கண்ட கணக்குகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டும் விதமாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே இந்த ஆவணத்தைக் குறியீடு செய்ய ஏற்புடையதா என்பது குறித்து நீதிமன்றத்தால் கேள்வி எழுப்பப்பட்டது.

2018ம் ஆண்டு முதல் வருமான வரி கணக்கில் காட்டப்பட்ட கணக்குகளில் இருந்து எடுக்கப்பட்ட கணக்கு குறிப்புகள் தான் இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள கணக்கு பட்டியலில் உள்ள குறிப்புகள் என பிரதிவாதியின் வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது. எனவே இந்த கணக்கு பட்டியல் குறிப்பினை தங்கள் தரப்பு ஆவணமாக குறியீடு செய்யப்பட வேண்டும் என பிரதிவாதியின் வழக்கறிஞரால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதற்கு வாதியின் வழக்கறிஞர் இந்த ஆவணத்தை யார் வேண்டுமானாலும் தயாரிக்க முடியும் என்றும், இதே ஆவணத்தை யார் வேண்டுமானாலும் தாக்கல் செய்வதற்கும் வாய்ப்புள்ளது என்றும், எனவே இந்த ஆவணத்தை சான்றாவனமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என ஆட்சேபிக்கப்பட்டது. இது தவிர சட்டப்பிரிவு 63 பாரதிய சாட்சிய அதிநயம் சட்டத்தின் கீழான சான்றையும் தாக்கல் செய்யவில்லை எனவும் வாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் ஆவணத்தைக் குறியீடு செய்ய வேண்டும் என்றும், வாதி தரப்பில் ஆவணத்தைக் குறியீடு செய்ய முடியாது என ஆட்சேபிக்கப்பட்ட நிலையில் இந்த ஆவணத்தின் செல்லும் தன்மை குறித்தும், ஆட்சேபனைகள் குறித்தும் வழக்கின் இறுதியில் இருதரப்பு வாதங்களையும் கேட்டு பின்னர் தீர்மானிக்க முடிவு செய்து பி.வா.சா.ஆ.7 முதல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டது.

6) 1ம் பிரதிவாதி 2018–2019–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் – அசல்

7) 1ம் பிரதிவாதி 2019–2020–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் – அசல்

8) 1ம் பிரதிவாதி 2020–2021–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் – அசல்

9) 1ம் பிரதிவாதி 2021–2022–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் – அசல்

10) 1ம் பிரதிவாதி 2022–2023–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் – அசல்

11) 1ம் பிரதிவாதி 2023–2024–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் – அசல்

12) 2ம் பிரதிவாதி 2020–2021–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் (HUF) – அசல்

13) 2ம் பிரதிவாதி 2021–2022–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் (HUF) – அசல்

14) 2ம் பிரதிவாதி 2022–2023–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் (HUF) – அசல்

15) 2ம் பிரதிவாதி 2023–2024–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் (HUF) – அசல்

16) 2ம் பிரதிவாதி 2024–2025–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் (HUF) – அசல்

17) 2ம் பிரதிவாதி 2025–2026–ம் ஆண்டு வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் (HUF) – அசல்

மேற்குறிப்பிட்ட ஆவணத்தின் முதல் பக்கத்தில் உள்ள சான்றானது வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அந்த வருமான வரி கணக்குகள் வருமானவரித்துறையால் ஏற்கப்பட்டது என்பது குறித்தான சான்று ஆகும். அந்த சான்று வருமானவரித்துறை கணினி பக்கத்தில் இருந்து தரவிறக்கம் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டதாக பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இது தவிர மேற்கண்ட ஆவணங்களின் முதல் பக்கம் தவிர இதர பக்கங்களில் உள்ள ஆவணங்களில் பிரதிவாதி நிறுவன முத்திரையோ அல்லது அதை தயாரித்தவரின் கையொப்பமோ இடம்பெறவில்லை, மேலும் பிரதிவாதி நிறுவனத்தின் முழு கணக்கு பட்டியலில் இருந்து தான் மேற்கண்ட கணக்குகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டும் விதமாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே இந்த ஆவணங்களின் முதல் பக்கம் தவிர இதர பக்கங்களை குறியீடு செய்ய ஏற்புடையதா என்பது குறித்து நீதிமன்றத்தால் கேள்வி எழுப்பப்பட்டது.

2018 ஆண்டு முதல் வருமான வரி கணக்குகளில் காட்டப்பட்ட கணக்குகளில் இருந்து எடுக்கப்பட்ட கணக்கு குறிப்புகள் தான் இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள கணக்கு பட்டியலில் உள்ள குறிப்புகள் என பிரதிவாதியின் வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது. எனவே இந்த கணக்கு

பட்டியல் குறிப்பினை தங்கள் தரப்பு ஆவணமாக குறியீடு செய்யப்பட வேண்டும் என பிரதிவாதியின் வழக்கறிஞரால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதற்கு வாதியின் வழக்கறிஞர் இந்த ஆவணத்தை யார் வேண்டுமானாலும் தயாரிக்க முடியும் என்றும், இதே ஆவணத்தை யார் வேண்டுமானாலும் தாக்கல் செய்வதற்கும் வாய்ப்புள்ளது என்றும், எனவே இந்த ஆவணத்தை சான்றாவனமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என ஆட்சேபிக்கப்பட்டது. இது தவிர சட்டப்பிரிவு 63 பாரதிய சாட்சிய அதிநயம் சட்டத்தின் கீழான சான்றையும் தாக்கல் செய்யவில்லை எனவும் வாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் ஆவணத்தைக் குறியீடு செய்ய வேண்டும் என்றும், வாதி தரப்பில் ஆவணத்தைக் குறியீடு செய்ய முடியாது என ஆட்சேபிக்கப்பட்ட நிலையில் இந்த ஆவணத்தின் செல்லும் தன்மை குறித்தும், ஆட்சேபனைகள் குறித்தும் வழக்கின் இறுதியில் இருதரப்பு வாதங்களையும் கேட்டு பின்னர் தீர்மானிக்க முடிவு செய்து மேற்குறிப்பிட்ட பட்டியல் ஆவண எண் 6 முதல் 17 வரையிலான ஆவணங்கள் முறையே பி.வா.சா.ஆ.12 முதல் பி.வா.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்பட்டது.

18) 2 ம் பிரதிவாதி பேன் கார்டு HUF – ஜெராக்ஸ்

19) 1 ம் பிரதிவாதி மற்றும் 2 ம் பிரதிவாதி பேன் கார்டு (ஜெராக்ஸ்)

பட்டியல் ஆவண எண் 18 மற்றும் 19 ஆகிய ஆவணங்களில் புகைப்பட நகல்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு மேற்கண்ட ஆவணங்களின் அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் ஒப்பீடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டு அசல் ஆவணத்துடன் நகல் ஆவணமானது ஒப்பீடு செய்து அவை இரண்டும் சரி என சரிபார்க்கப்பட்டு மேற்கண்ட

ஆவணங்கள் குறியீடு செய்ய பரிசீலிக்கப்பட்டது, அதில் மேற்கண்ட நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 18 குறியீடு செய்வதற்கு தங்கள் தரப்பில் ஆட்சேபனை உள்ளதாக வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார், மேலும் HUF என்று குறிப்பிட்டு வழங்கப்பட்ட பேன் கார்டிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபனை குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானிக்க முடிவு செய்யப்பட்டு மேற்கண்ட நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 18 ஆட்சேபனைக்குட்பட்டும், நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 19 ஆட்சேபனையின்றியும் முறையே பி.வா.சா.ஆ.24 மற்றும் பி.வா.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்பட்டது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

பி.வா.சா.ஆ.12 முதல் 23 வரை உள்ள ஆவணங்கள் நிரூபண வாக்குமூலத்தில் வருமான வரி கணக்குகள் செலுத்தியதற்கான சான்றுகள் என குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.12 முதல் 23 வரையுள்ள ஆவணங்களின் முதல் பக்கத்தில் Indian Income Tax Return Acknowledgement என்று தான் உள்ளது, நீங்கள் கூறுவது போன்று Certificate என்று மேற்கண்ட ஆவணங்களின் முதல் பக்கங்களில் எங்கும் இடம் பெறவில்லை என்று சொன்னால் தமிழில் வருமான வரி சான்றிதழ் என்று தான் சொல்கிறார்கள், அதையே நானும் கூறியுள்ளேன்.

பி.வா.சா.ஆ.12 முதல் 23 வரையுள்ள ஆவணங்களின் முதல் பக்கம் தவிர அதனுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள கணக்கு பட்டியல்கள் குறித்து உங்களுடைய நிரூபண வாக்கு மூலத்தில் நீங்கள்

குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் வருமான வரி கணக்குகள் என்று தான் நான் கூறியுள்ளேன், அதுவும் சேர்ந்து தான் வருமான வரி கணக்குகள் ஆகும்.

பி.வா.சா.ஆ.12 முதல் 23 ஆவணங்களுடன் இணைத்து வருமான வரி செலுத்துவதற்கு நீங்கள் தாக்கல் செய்த கணக்குகளையும், அதனுடன் இணைந்த படிவங்களையும் தற்போது பி.வா.சா.ஆ.12 முதல் 23 வரை உள்ள ஆவணங்களுடன் சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

உரிய ஆவணங்களை தாக்கல் செய்யாமல், உங்களுடைய முழுமையான கணக்குகளையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்க முன்வந்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.12, 13 ஆவணத்தில் முதல் பக்கத்தில் வலது பக்கத்தில் ITR1 என்று அந்த படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி அந்த ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

ITR1 என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள வருமான வரி கணக்குகள் ஒரு சம்பளம் வாங்கும் நபர் வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்யும் முறையை குறிப்பதாகும், அதற்கும் நீங்கள் செய்து வந்த இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள பரிவர்த்தனைகளுக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரிதான்.

பி.வா.சா.ஆ.12, 13 ஆவணங்களுடன் இணைத்து நீங்கள் தாக்கல் செய்துள்ள cash flow statement ஆவணங்களுக்கும், இந்த வருமான வரி

**ஒப்புதல் ஆவணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.**

**பி.வா.சா.ஆ.14 முதல் 17 வரையுள்ள ஆவணங்களில் ITR ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள profit தொகைக்கும், நீங்கள் அதனுடன் இணைத்து தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள profit and loss account statement profit தொகைக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.**

**பி.வா.சா.ஆ.12 முதல் 23 வரை உள்ள ஆவணங்களில் நீங்கள் தாக்கல் செய்துள்ள முதல் பக்கம் தவிர இதர பக்கங்களில் உள்ள கணக்குகளில் அந்த கணக்குகள் யாரால் தயாரிக்கப்பட்டது என்றும் அல்லது எந்த அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டது என்று அந்த அலுவலக முத்திரையும், வேறு எந்த குறிப்புகளும் அது தயாரிக்கப்பட்டது குறித்து இடம்பெறவில்லை என்று சொன்னால் seal இல்லை, ஆனால் நான் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மைதான்.**

**பி.வா.சா.ஆ.12 முதல் 23 வரை உள்ள ஆவணங்களில் ITR Statement தவிர தாக்கல் செய்யப்பட்டுள்ள இதர கணக்குகள் கொண்ட ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக உங்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல.**

**பி.வா.சா.ஆ.24 HUF PAN CARD என்றால் சரிதான், இந்த கார்டு வைத்திருக்கும் நபரின் பெற்றோர் இல்லை என்றால் இவர்கள் இது போன்ற ஒரு வருமான வரி கணக்கு பதிவினை ஏற்படுத்தி இந்த கணக்குகளை பராமரிக்க முடியும்.**

நிரூபண வாக்குமூலத்தில் பத்தி மூன்றில் குடும்ப வருமானத்தை பி.வா.சா.ஆ.24 HUF PAN CARD மூலமாக செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

பி.வா.சா.ஆ.18 முதல் 23 வரையுள்ள ஆவணங்களில் குடும்ப வருமான கணக்குகளை HUF PAN CARD பயன்படுத்தி தாக்கல் செய்யப்பட்டதாக தான் குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

உங்களுடைய வருமான வரி கணக்குகளில் உங்களுடைய வருமானம் ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமாக இருப்பதாக ஒவ்வொரு ஆண்டும் காட்டியுள்ளீர்கள் என்றால் எனது வருமானத்திற்கு ஏற்ப வருமான வரி கணக்குகளில் நான் வருமான தொகையினை காட்டியுள்ளேன்.

ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான வருமானம் வரும்போது tax audit ஆவணம் சேர்த்து தாக்கல் செய்ய வேண்டும், ஆனால் அந்த tax audit ஆவணத்தை இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வருமான வரி கணக்குகளில் நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.12 முதல் 23 வரை உள்ள ஆவணங்களின் பின்பக்கங்களில் உள்ள கணக்குகளை நீங்களாக தயாரித்து தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆகிய ஆவணங்களில் இடம்பெற்றுள்ள கணக்குகள் திரு.முருகேசன் என்ற பெயரில் உள்ள உங்களுடைய தனிப்பட்ட வரவு செலவு கணக்குகள் என்றும், அதற்கும் பத்மஸ்ரீ

இன்ஜினியரிங் நிறுவனமான வாதி நிறுவனத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்களில் அதை தயாரித்தவர் யார் என்ற கையொப்பமோ அல்லது யாரால் பராமரிக்கப்பட்டது என்று பராமரிக்கப்பட்டவரின் கையொப்பம் மற்றும் முத்திரையோ இந்த ஆவணங்களில் இடம்பெறவில்லை என்று சொன்னால் சரிதான், இடம்பெறவில்லை.

எந்திரங்கள் வாங்குவதற்கான பணப்பரிவர்த்தனையானது 2019 ஆம் ஆண்டு முதல் தான் வாதி நிறுவனத்திற்கும் உங்களுக்கும் தொடங்கியது, ஆனால் தனிப்பட்ட முறையில் கொடுக்கப்பட்ட பண பரிவர்த்தனைகளுக்கு எந்திரங்கள் கொடுக்கப்பட்டதற்கான காரணங்களுக்காக சேர்க்க முடியாது என்றால் வாதி நிறுவனத்தின் auditor நான் தனிப்பட்ட முறையில் செலுத்திய தொகையினை முன்பணத் தொகையாக எடுத்துக் கொள்வதாக எனக்கு கடிதம் கொடுத்துள்ளார்.

Auditor கொடுத்ததாக சொல்லும் கடிதமானது பொய்யானது என்றும், அந்த ஆடிட்டரும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்பதால் அந்த கடிதமானது ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.9, 10 மற்றும் 11 ஆகிய ஆவணங்களில் இடம்பெற்றுள்ள கணக்குகள் தான் யாழினி yarn மில்ஸ் நிறுவனத்திற்கும் வாதி நிறுவனத்திற்கும் ஏற்பட்ட பரிவர்த்தனைகளுக்குரிய கணக்குகள் என்று

நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான், 1 April 2019 முதல் 31.03.2022 ஆண்டு வரை உள்ள வரவு செலவு கணக்குகள் ஆகும்.

1 April 2019 முதல் 31.03.2022 ஆண்டு வரை உள்ள வரவு செலவு கணக்குகள் யாரால், எப்போது தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது என்று கையொப்பமோ அல்லது முத்திரையோ இந்த ஆவணங்களில் இடம்பெறவில்லை என்று சொன்னால் சரிதான், நான் வருமான வரி படிவம் வழங்கிய போது கையொப்பமிட்டு தான் கொடுத்தேன்.

பி.வா.சா.ஆ.9, 10 ஆவணங்களில் பல பணப் பரிவர்த்தனைகள் நடந்ததாகவும் அந்த பண பரிவர்த்தனைகள் நடந்ததற்கான மிகப்பெரிய தொகைக்குரிய voucher களை குறிப்பிட்டுள்ளீர்கள், ஆனால் அந்த voucher களை இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தாக்கல் செய்யவில்லை, எந்திரங்கள் வாங்கியவுடன் tax invoice நம்பர் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்திரங்கள் வாங்கியதற்குரிய tax invoice கணக்கு பட்டியல்களை தனியாக நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள், ஆனால் பணம் செலுத்தியதற்குரிய voucher குறித்து நீங்கள் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எந்திரங்கள் வாங்கும்போது பணம் கொடுத்து தான் பெற்றுக் கொண்டேன்.

எந்திரங்கள் வாங்கும் போது நீங்கள் பணம் கொடுத்ததாக சொல்வது போன்று பண பரிமாற்றங்கள் எதுவும் உங்களுக்கும் வாதிக்கும் இடையே நடைபெறவில்லை, வழக்கிற்காக நீங்கள் பணம் செலுத்தியதாக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள கணக்குகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள கணக்குப் பட்டியல்களுக்கும், உங்களுடைய எதிர்வழக்குரையில் நீங்கள் குறிப்பிட்டுள்ள தொகை கணக்குகளுக்கும் இடையே வித்தியாசங்கள் உள்ளது, இரண்டும் ஒத்துப் போகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

17.04.2021 தேதியில் வாதியால் over head machinery என்ற எந்திரமானது வா.சா.ஆ.4 இல் குறிப்பிட்டுள்ளவாறு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, ஆனால் அதை மறைத்து அதே தேதியை குறிப்பிட்டு machinery maintenance என்று பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, எந்திரங்கள் வாங்கியதற்கான invoice எண் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால் நீங்கள் கூறுவது போல் இந்த வழக்கானது காலாவதியாக வில்லை என்று சொன்னால் சரியல்ல. 2019 – 2020 ஆம் ஆண்டுகளிலேயே எந்திரங்கள் வழங்கப்பட்டு விட்டது, எந்திரங்கள் கொடுக்கப்பட்டதற்கும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள invoice களுக்கும் சம்பந்தமில்லை.

வாதி நிறுவனத்தால் உங்களுக்கு வழங்கப்பட்ட எந்திரங்களுக்குரிய பணத்தை நீங்கள் வாதி நிறுவனத்திற்கு செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக தான் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது, இன்வாய்ஸ் அடிப்படையில் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்படவில்லை, எனவே நீங்கள் கூறும் கூற்று தவறானது, எந்திரங்கள் வழங்கப்பட்ட போதுதான் actual invoice உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, எனவே அந்த அடிப்படையில் தான் இந்த வழக்கானது

தாக்கல் செய்யப்பட்டுள்ளது, எனவே உரிய காலத்தில் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு.

நீங்கள் தாக்கல் செய்துள்ள இந்த கூடுதல் ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக உங்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள், இந்த ஆவணங்கள் செல்லாத ஆவணங்கள், இந்த ஆவணத்தை சான்றுகளாக ஏற்க முடியாது, எனவே உங்களுடைய சாட்சியமும் இது குறித்து ஏற்க முடியாது என்று சொன்னால் பொய்.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.